*முக்கிய வார்த்தைகள்:*
*உறுதிப்பாடு*
*நிலைத்தன்மை*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**02 ஜனவரி 2026 / 12 ரஜப் ஹிஜிரி 1447**

# உறுதிப்பாட்டுடன் நமது அடிகளை எடுத்து வைத்து ஆரம்பித்தல்

**الحَمْدُ لِلَّهِ الَّذِي خَلَقَ الإِنْسَانَ فِي أَحْسَنِ تَقْوِيمٍ، وَأَمَرَنَا بِالتَّقْوَى وَالخُلُقِ الكَرِيمِ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اَللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَصَحْبِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ اللَّهِ، اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ، وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.**

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உண்மையான "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொண்டு, அந்த "தக்வா" வை அதிகரித்துக் கொள்வோமாக! அந்த "தக்வா" நமது வாழ்க்கையில் பிரதிபலிக்க வேண்டும்; அல்லாஹ்வின் கட்டளைகளை விசுவாசத்துடன் ஏற்று, செயல்படுத்துகிறோம் என்பதற்கு ஆதாரமாக இருக்க வேண்டும்; நமது வாழ்க்கைப் பயணத்தை, அதன் இறுதி வரைத் தொடர்வதில் ஏற்பட வேண்டிய நம்பிக்கை மற்றும் பொறுமைக்கு அஸ்திவாரமாக அமைய வேண்டும். அறிந்து கொள்ளுங்கள்! வாழ்க்கையில் நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய சிறந்த தயாரிப்பு, செல்வமோ பதவியோ அல்லது உலகியல் வெற்றியோ அல்ல, மாறாக, அது ஒவ்வொரு சூழ்நிலையிலும் அல்லாஹ்வுடன் இணைந்த **உறுதிப்பாடான** நிலையாகும்.

உண்மையான ”தக்வா” வை தற்காலிக முயற்சியின் மூலம் அடைந்து கொள்ள முடியாது; வாழ்க்கை முழுவதும் உறுதியான **நிலைத்தன்மையுடன்**, தொடர்ந்து செய்யப்படும் முயற்சிகளின் மூலமாகவே அடைந்து கொள்ள முடியும். ”தக்வா” வானது, நமது தற்காலிக உணர்ச்சியின் விளைவாக இருக்க முடியாது. மாறாக, அது நீடித்த விசுவாசத்தின் பலனாகவே இருக்க முடியும்.

எனவே, தமது ”தக்வா” வைப் பாதுகாத்துக் கொள்ள உண்மையாகவே விரும்புபவர்கள் அல்லாஹ்வுக்கு அடிபணிந்து நடப்பதிலும், நற்காரியங்களைச் செய்வதிலும், தம்மை முன்னேற்றிக் கொள்வதிலும் தொடர்ந்து **நிலைத்தன்மையுடனும்** உறுதியாகவும் இருப்பது அவசியமாகும். அதற்காகச் செய்யப்படும் முயற்சிகள் சிறியவையாக இருப்பினும் சரியே.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே**!

நாம் 2026-வது புதிய ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் அதே வேளையில், அல்லாஹ்வின் மரியாதைக்குரிய மாதங்களில் ஒன்றான அருள்மிக்க ரஜப் மாதத்திலும் இருக்கின்றோம். ரஜப் மாதத்தை நாம் சந்தித்துள்ள இந்த வாய்ப்பை, நமது வாழ்க்கைப் பாதையை மறுமதிப்பீடு செய்து கொள்வதற்கான ஒரு தெய்வீக அழைப்பாகக் கருதுமாறு உங்கள் அனைவரையும் நான் ஆர்வமூட்டுகிறேன். வெறும் உலகியல் சாதனைகளின் அடிப்படையில் மட்டுமல்லாமல், அதை விட முக்கியமாக, அல்லாஹ்விடம் நமது நிலை என்ன என்பதன் அடிப்படையிலும் நாம் சிந்தித்து, மறுமதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

இங்கு நான் சிந்திக்கத்தக்க ஒரு கேள்வியை உங்களிடம் கேட்க விரும்புகிறேன். **எத்தனை நல்ல காரியங்களை மிகுந்த உற்சாகத்துடன் நாம் தொடங்கி, அவை பாதியிலேயே தடைபடுவதைக் கண்டிருக் கின்றோம்?** அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே இதன் பின்னணியில் உள்ள

காரணம் என்ன? விடா முயற்சியைச் செய்வதற்கான ஆற்றலை வளர்த்துக் கொள்ள நேரம் ஒதுக்காததே இதற்குக் காரணமாகும்.

நமது மார்க்கம் ஒரு மிகச் சிறந்த மதிப்பீட்டை அறிமுகப்படுத்துகிறது; அது அடிக்கடி குறிப்பிடப்பட்டாலும், அதை உண்மையாக உயிப்பிப்பது கடினமான உள்ளது. அந்த மதிப்பீடு தான், **இஸ்திகாமாஹ்** என்பதாகும். அதன் பொருள் **உறுதியான நிலைத்தன்மை** என்பதாகும்.

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஃபுஸ்ஸிலத்" எனும் அத்தியாயத்தின் 30-வது வசனத்தில் கூறுகிறான்:

إِنَّ ٱلَّذِينَ قَالُواْ رَبُّنَا ٱللَّهُ ثُمَّ ٱسْتَقَٰمُواْ تَتَنَزَّلُ عَلَيْهِمُ ٱلْمَلَٰٓئِكَةُ
أَلَّا تَخَافُواْ وَلَا تَحْزَنُواْ وَأَبْشِرُواْ بِٱلْجَنَّةِ ٱلَّتِى كُنتُمْ تُوعَدُونَ ٣٠

பொருள்: நிச்சயமாக எவர்கள்: "எங்கள் இறைவன் அல்லாஹ் தான்" என்று கூறி, [அதன் மீது] **உறுதியாக நிலைத்து** நிற்கின்றார்களோ, நிச்சயமாக அவர்கள் பால் வானவர்களாகிய மலக்குகள் வந்து, நீங்கள் பயப்படாதீர்கள்; கவலையும் பட வேண்டாம் - உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்தைக் கொண்டு மகிழ்ச்சி பெறுங்கள்" எனக் கூறியவாறு இறங்குவார்கள்.

தற்போது ஓதப்பட்ட வசனமாகிறது, ஓரிறை நம்பிக்கையாகிய ஈமான் என்பது வெறும் வாய்மொழி அறிவிப்பாக இருப்பது கூடாது; மாறாக, அதனை **உறுதியான நிலைத்தன்மையுடன்** நிரூபிப்பது அவசியமாகும் எனச் சுட்டிக் காட்டுகிறது. அதாவது, அடிபணிந்து நடக்கும் செயல்களையும் நற்காரியங்களையும் செய்வதில் சகிப்புத்தன்மையும், எல்லாக் காலங்களிலும் நமது நடத்தையை தொடர்ந்து முன்னேற்றிக் கொள்வதில் ஆர்வமும் நம்மிடம் காணப்பட வேண்டும் எனக் கூறுகிறது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

புதிய ஆண்டின் வருகையும், ரஜப் மாதமும் ஆன்மீக வாழ்க்கையானது ஒரு குறுகிய காலத் திட்டமல்ல, அது ஒரு நீண்ட காலப் பயணத்தின் திட்டமாகும் என நமக்கு நினைவூட்டுகின்றன. ஆன்மீக வெற்றியானது, தற்காலிக உணர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதல்ல; மாறாக, உற்சாகம் குறைந்துள்ள போதும், சூழ்நிலைகள் சாதகமாக இல்லாத போதும் கூட, **சிறிய, தொடர் முயற்சியை** அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாகும்.

இஸ்லாம், உடனே பரிபூரணத்துவத்தை அடைந்து விட வேண்டும் எனக் கூறவில்லை; வாழ்க்கைப் பயணத்தின் ஏற்ற இறக்கங்களின் வழியாக, படிப்படியாக அதனை அடைய வேண்டும் என்றே கூறுகிறது.

எனவே, கோரிக்கைகள் மற்றும் தேட்டங்களால் நிரப்பமாக உள்ள இந்த வாழ்க்கையில், **உறுதியான நிலைத்தன்மையை** எவ்வாறு ஏற்படுத்திக் கொள்வது? அதற்கான முயற்சிகள் என்ன என்பதை இங்கு காண இருக்கின்றோம்:

**முதலாவதாக: ஆர்வத்துடன் மட்டுமல்லாமல், தெளிவான திசை மற்றும் நோக்கத்துடன் முயற்சிக்க வேண்டும்.**

நம்மில் பலர் கடினமாக உழைக்கின்றார்கள்; தமது தொழில்கள், பொருளாதாரம், கல்வி மற்றும் குடும்பம் ஆகிய விஷயங்களில் விரிவான திட்டங்களுடன் குறிக்கோள்களை ஏற்படுத்திக் கொள்கிறார்கள். இது தெளிவான திசைக்கு ஓர் உதாரணம் ஆகும். இவ்விஷயம் மார்க்க சம்பந்தமான விவகாரங்களிலும் பின்பற்றப்பட வேண்டும். இவ்விஷயங்களில் தீர்மானிக்கப்பட்ட நோக்கங்களுடன் **உறுதியான நிலைத்தன்மையை** ஏற்படுத்திக் கொள்ள ஆரம்பிக்க வேண்டும். அதாவது, வீடு, அலுவலகம், கல்விக்கூடம், பள்ளிவாசல் ஆகியவற்றில் நாம் செய்யும் முயற்சிகளை, அல்லாஹ்வின் அடியார்கள் எனும் ரீதியில், அல்லாஹ்வின் திருப்தியை அடைவதற்காகச் செய்ய வேண்டும்.

ஒரு தகப்பனார், தெளிவான நோக்கத்துடன் ஆகுமான வழிகளில் சம்பாதிக்கப்பட்ட வாழ்வாதாரத்தைத் தனது குடும்பத்தார்களுக்கு வழங்க வேண்டும். ஒரு தாய், தெளிவான நோக்கத்துடன் தனது பிள்ளைகளுக்குப் பொறுமையாகவும் விடா முயற்சியுடனும் பயிற்றுவிக்க வேண்டும். அவ்வாறே, ஒரு மாணவருக்கு, ஓய்வில்லாத கல்வியின் அட்டவணை இருந்த போதிலும் தனது தொழுகைகளை முறைப்படித் தொழுது வர வேண்டும் - இவையெல்லாம், **உறுதியான நிலைத்தன்மையுடன்** செயல்படுவதற்கான வழிமுறைகளாகும்.

**இரண்டாவதாக: வெறும் தீர்மானங்களை மட்டும் எடுத்துக் கொண்டிருக்காமல், நல்ல பழக்க வழக்கங்களை தொடர்ச்சியாக ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.**

கவனமாகத் திட்டமிடுதல் என்பது நமது சமூகக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாகும். பஸ், எம்.ஆர்.டி ஆகியவற்றில் பயணிப்பதற்கான திட்டங்கள் முதற்கொண்டு, சந்திப்புகளின் தேதிகள், பள்ளித் தேர்வுகளின் அட்டணைகள் வரை அனைத்தும் உயர்மட்ட ஒழுக்கங்களின் பால் அவசியமாகின்றன. இவ்வொழுக்கங்கள் ஆன்மீக வாழ்க்கையிலும் பின்பற்றப்பட வேண்டும்.

**உறுதியான நிலைத்தன்மை** என்பது கடுமையான மாற்றங்களால் ஏற்படுத்திக் கொள்ளப்படுவதல்ல, சிறிய, **தொடர் பழக்கங்களால்** ஏற்படுத்திக் கொள்ளப்படுவதாகும். உதாரணமாக, திருக்குர்ஆனின் சில வசனங்களை அன்றாடம் ஓதி வருவதாகும்; வேலைக்குப் புறப்படுவதற்கு முன்பாகக் கூட சில நிமிடங்கள் ஓதலாம்; நமது பயணங்களின் போது சுருக்கமான "திக்ரு" களை [தியானங்களை] ச்செய்யலாம்; உடல் ரீதியிலோ அல்லது டிஜிட்டல் ரீதியிலோ தர்மச் செயல்களைச் செய்வதை வழக்கமாக்கிக் கொள்ளலாம்; நமது தொழில் நண்பர்கள், அண்டை வீட்டார்கள், குடும்பத்தார்கள் ஆகியோருடன் பழகும் விஷயத்தில் நல்ல எண்ணங்களை ஏற்படுத்திக் கொள்ள முயற்சிக்கலாம். இவை போன்ற சிறிய, நல்ல பழக்க வழக்கங்கள், சோதனைகளை நாம் எதிர்கொள்ளும் போது

அவற்றை எதிர்கொள்வதற்கான ஆற்றலையும் நமது இறை நம்பிக்கையின் ஆற்றலையும் நமக்கு வழங்கும்.

**மூன்றாவதாக: வாழ்க்கைப் பயணத்துக்கு அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையை நங்கூரமாக அமைத்துக் கொள்வது; நமது சொந்தத் திறமையை மட்டுமல்ல**

பலர் தமது பயணத்தை ஆர்வத்துடன் ஆரம்பிக்கின்றார்கள்; ஆனால், இடையிலேயே சோர்வடைந்து விடுகிறார்கள். காரணம், அல்லாஹ்வின் மீது நம்பிக்கைக் கொள்வதை மறந்து, ஒவ்வொரு விஷயத்திலும் தமது சொந்த முயற்சியை மட்டும் நம்பி செயல்படுகிறார்கள். உண்மையான **நிலைத்தன்மை** என்பது "தவக்கல்" மூலம் ஏற்படுகிறது - அல்லாஹ்வின் உதவியைக் கொண்டே நாம் செயல்பட முடியும் என்ற விழிப்புணர்வு நம்மிடம் காணப்பட வேண்டும். எனவே, நமது துஆ [பிரார்த்தனை] வெறும் வணக்க வழிபாட்டின் முடிவாக மட்டும் இருப்பது கூடாது; அதனை நமது ஆற்றலின் மூலமாக அமைத்துக் கொள்ள வேண்டும். பின்வரும் பிரார்த்தனையை அன்றாடம் ஓதி வர வேண்டும்:

اللَّهُمَّ ثَبِّتْ قُلُوبَنَا عَلَى دِينِكَ

பொருள்: "யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களை உனது மார்க்கத்தின் மீது நிலைத்திருக்கச் செய்வாயாக"

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே!**

"ரஜப் மாதம் விதை விதைக்கும் மாதமாகும்; ஷஃபான் மாதம் தண்ணீர் பாய்ச்சும் மாதமாகும்; ரமதான் மாதமோ அறுவடை செய்யும் மாதமாகும்" என அறிஞர்கள் கூறியுள்ளதை நினைவில் கொள்ளுங்கள். விதை விதைக்கும் காலத்தில் **உறுதியான நிலைத்தன்மை** எனும் விதையை விதைக்கத் தவறி விடாதீர்கள்.

உறுதியான இறை நம்பிக்கையுடனும் அமைதியான உள்ளங்களுடனும் பொருள்மிக்க வாழ்க்கையுடனும் ரஜப் மாதத்தில் வாழ்வதற்கும், ஷஃபான் மற்றும் ரமதான் மாதத்தை அடைவதற்கும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா அருள் புரிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا اْلمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ

وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.